# மன்னிக்க முடியும்

## மறுரூபமாக்கும் சத்தியங்கள்

### கட்டுரை - 8



# மன்னிக்க முடியும்

நாங்கள் குடும்பமாக பிரயாணம் பண்ணுகையில், வாசிப்பதற்கென்று புத்தகம் ஒன்றைத் தெரிவுசெய்வது எங்களது வழக்கம்; எனது மனைவி பிரயாணத்தின்போது புத்தகத்திலிருந்து குறிப்பிட்ட சில பாகங்களை எங்களுக்காகச் சத்தமாய் வாசிப்பாள். சமீபத்தில் நாங்கள் சென்ற ஒரு பிரயாணத்தின் போது, சகோ. Eugene Burns அவர்களினால் எழுதப்பட்டுள்ள "மீண்டும் ஜீவனோடு" என்ற புத்தகத் தொடரின் மூன்றாம் புத்தகத்தை வாசிக்கும்படிக்கு எங்கள் மகன் கேட்டுக் கொண்டான்; அப்புத்தகத்தின் பெயர் "Fingers Stained With Evil" என்பதாகும். கி.பி. 1420-முதல் கி.பி. 1498-ஆம் ஆண்டு வரை வாழ்ந்த Tomas de Torquemada - என்பவரின் உயிர்த்தெழுதல் பற்றின கற்பனை கதையோடு அப்புத்தகம் துவங்குகின்றது. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சம்பவித்த ஸ்பானிய கத்தோலிக்க ஒடுக்குமுறை விசாரணையின்போது, இவர் 1443-ஆம் வருடம் முதல், தனது மரணம் வரையிலும், ஸ்பெயின் நாட்டின் மத விசாரணைக்காரராய்ச் செயல்பட்டவராவார். இவர் பல்லாயிரம் ஜனங்களை வேதப்புரட்டல்காரர்கள் என்று நியாயந்தீர்த்து, சுட்டெரித்து அல்லது தூக்கிலிட்டுக் கொன்றுபோட்டார். இப்படிக் கொல்லப்பட்ட குடும்பத்தின் சொத்துக்கள் அனைத்தையும் இவர் பறிமுதல் செய்துகொண்டார்; கொல்லப்பட்டவர்களின் மனைவிகளும், பிள்ளைகளும் வீடு இல்லாமையின் நிமித்தமும், பசிபட்டினியின் நிமித்தமும் மடிந்துபோனார்கள். இவரது உயிர்த்தெழுதல் குறித்த கற்பனை கதையினை சகோ. Eugene Burns - அவர்கள் எழுதுகையில், உயிர்த்தெழுந்து வரும் Torquemada, தன்னால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்கும் போது, அவர் தங்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும் செய்த காரியங்கள் **மன்னிக்கப்பட முடியாதவைகள்** என்று பாதிக்கப்பட்டவர்களில் அநேகர் கூறுகின்றனர்.

நீதிமன்றங்களில் குற்றவாளிகளுக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படும்போது, இவர்களால் மிகக் கடுமையான கொடுமைகளுக்கு ஆளானவர்கள், நீதிமன்றங்களில் வந்து பேசுவதற்குச் சமீப காலங்களில் வாய்ப்பு அளிக்கப்படுகின்றனர்; மேலும் இந்தப் பாதிக்கப்பட்டவர்கள், தங்களுக்குச் செய்யப்பட்டவைகள் *மன்னிக்கப்பட முடியாதவைகள்* என்று கூறுவதையே நாம் பெரும்பாலும் கேட்டிருக்கின்றோம்; மேலும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் ஏன் இவ்வாறு எண்ணுகின்றனர் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது; ஆனாலும் இதற்குக் குறிப்பிடத்தக்க விதத்தில் விதிவிலக்காகவும் இருந்தவர்கள் உண்டு. பாதிக்கப்பட்டவர்களில் சிலரும், அவர்களுடைய குடும்பத்தினரும், குற்றவாளி செய்த குற்றம் தங்கள்மீது எத்தகைய கொடிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்று விவரித்தவர்களாகவும், பின்னர் தாங்கள் குற்றவாளியை மன்னிப்பதாகவும் தெரிவித்துள்ளனர். ***இந்த விதிவிலக்கான சம்பவங்கள், அன்பினுடைய மறுரூபமாக்கும் வல்லமைக்கு, அதாவது மன்னிப்பு மூலம் வெளிப்படும் அன்பின் வல்லமைக்கு, ஆற்றல்மிக்க சாட்சியங்களாக விளங்குகின்றன.*** ஈடுபலி மற்றும் திரும்பக்கொடுத்தல் பற்றின தேவனுடைய திட்டத்திற்கு, எப்படி மன்னிப்பு எனும் காரியம் முக்கியமானதாகவும், மையக்கருத்தாகவும் காணப்படுகின்றது என்பதைக் கிறிஸ்தவர்களாகிய நாம் அறிவோம். நாம் எவ்வளவாக மன்னிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதையும் நாம் அறிவோம்; மேலும் மற்றவர்களை மன்னிக்கக் கற்றுக்கொள்வது என்பது, பரலோகத்தின் கதவுகள் நமக்குத் திறக்கப்படும்படிக்கு, நாம் பெற்றிருக்க வேண்டிய குணலட்சணத்தின் விஷயத்தில் மிகவும் முக்கியமான காரியமாகக் காணப்படுகின்றது என்பதையும் நாம் தெளிவாக அறிவோம். "*தாம் கடன்பட்டிராத ஒரு கடனை இயேசு கட்டித்தீர்த்தார்; ஏனென்றால் நாம் கட்டித்தீர்க்க முடியாத ஒரு கடனையே நாம் கட்டித்தீர்க்கும்படிக்குக்*

கடமைப்பட்டிருந்தோமென" ஒரு மனுஷன் எழுதியிருக்கின்றார். மத்தேயு 18-ஆம் அதிகாரத்தில், செலுத்த முடியாத கடனைப் பெற்றிருந்த இரண்டு ஊழியக்காரர்கள் பற்றின உவமையினை இயேசு நமக்குக் கூறியுள்ளார். அவ்வுவமையின் பாடம் என்னவெனில், நம்மால் செலுத்த இயலாதக் கடனை நமது பரமபிதா மன்னித்திருக்கின்றபடியால், நாமும் மற்றவர்கள் நம்மிடம் பட்டிருக்கும் கடனை மன்னிக்கும்படிக்கு எதிர்பார்க் கப்படுகின்றது என்பதேயாகும். இவ்வுவமையின் வாயிலாக வெளிப்படும் படிப்பினையில், தளர்வுகள் எவற்றிற்கும் இடமில்லை. நமக்குக் கடன்பட்டிருக்கின்ற/தப்பிதங்கள் செய்துள்ள ஒவ்வொருவரையும், நாம் நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து மன்னிக்க வேண்டும். நம்மைக் காயப்படுத்தின வர்களுக்கு எதிராக அல்லது நமக்கு விரோதமாய்த் தப்பிதங்கள் செய்தவர்களுக்கு எதிராக நாம் கொண்டிருக்கும் கோபத்தை/மனக்கசப்பை நாம் மன்னித்து விடவேண்டும். இயேசு இந்தப் பாடத்தை மலைப்பிரசங்கத்திலும் நமக்குக் கொடுத்திருக்கின்றார். மத்தேயு 6:14-15-ஆம் வசனங்களில் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்: "*மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.*" இவ்வசனத்தில் விளங்கும் படிப்பினையில், சந்தேகத்திற்கு எந்த இடமும் இல்லை. ஆனாலும் மன்னிக்கப்பட முடியாத சில விஷயங்கள் என்று ஏதேனும் காணப்படுகின்றதா? மனித சரித்திரத்தின் பக்கங்களில், ஒருவருக்கொருவர் செய்துள்ள நம்பமுடியாத கொடுமைகள் பற்றின சம்பவங்களும், ஒருவர் இன்னொருவரால் அனுபவித்துள்ள நம்பமுடியாதளவுக்கு உள்ள கஷ்டங்கள் பற்றின காரியங்களுமாகிய பதிவுகள் நிரம்பிக் காணப்படுகின்றன. மனுக்குலத்தினுடைய சமுதாய மற்றும்

அரசியல் சரித்திரத்தில், நம்பிக்கை துரோகங்களும், அடக்கு முறைகளும், அலட்சியங்களும், பகைமைகளுமாகிய நிகழ்வுகள் நிரம்பிக் காணப்படுகின்றன. இவ்வளவு அநியாயங்கள் நடைபெற்றிருக்கின்றபோதிலும், மனிதன் செய்துள்ள இக்காரி யங்களில் எதையேனும் தேவன் மன்னிக்க முடியாதவையாக கருதப்போகின்றார் என்ற எண்ணம் எனக்கு (ஆசிரியர்) இல்லை. இம்மாதிரியான காரியங்களில் தேவனுடைய கண்ணோட்டத் தினையே நாமும் பெற்றிருப்பதும், பின்னர் அதன்படியே நடப்பதுமே, கிறிஸ்தவர்களென நமக்கு இருக்கும் சவாலாகக் காணப்படுகின்றது. நமக்கு எதிராக காரியங்களை/தீங்கைச் செய்தவர், நம்முடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள், நம்முடைய ஐக்கியத்திற்குள் காணப்படும் ஒருவராக இருப்பினும் அல்லது நம்மைச் சுற்றியுள்ள உலகத்திலுள்ள ஒருவராக இருப்பினும், அது ஒரு பொருட்டல்ல. நாம் எவ்வாறு நமது கர்த்தராகிய இயேசுவின் சீஷர்களென வாழவேண்டும் என்பதை அவர் உவமைகளாகிய கதைகளைப் பயன்படுத்தி கற்பித்துள்ளார். உவமைகளை, அவர் பல்வேறு காரணங்களுக்காகப் பயன்படுத்தினார். அப்படிப்பட்ட காரணங்களில் ஒன்று, அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், மற்றவர்களைப்பற்றின கதைகளைக் கேட்பதற்கு கவனம் செலுத்தும் பொதுவான இயல்பை உடையவர்களாகக் காணப்பட்டனர் என்பதாகும். மற்றவர்களின் சங்கதியைப் பார்ப்பதும், அதிலிருந்து பாடம் அடைவதுமாகிய காரியம் குறித்து நம் அனைவராலும் புரிந்துகொள்ள முடிகின்றது; ஆகையால் சில சமயங்களில் மன்னிப்பை வழங்குவது எனக்குச் சவாலாக அமையும்போது, கொடூரமான குற்றங்களை மன்னிக்க முடிந்தவர்களாகக் காணப்படுகின்ற சில உலக மனிதர்கள் பற்றின சம்பவங்களிலிருந்து நான் ஊக்கமடைவதுண்டு. நீங்களும் அநேகமாக அப்படியாகத்தான் உணருவீர்கள் என்று நம்பு கின்றேன். நான் ஐந்து சம்பவங்களை உங்களோடு பகிர்ந்து

கொள்ள விரும்புகின்றேன்; அவைகள் சமகாலத்தில் நிகழ்ந்த மன்னிப்பு சம்பந்தப்பட்ட ஐந்து சம்பவங்களாகும்; அவைகளில் சில, உங்களுக்கும் பரிச்சயமாகக் காணப்படலாம்.

## முதலாம் சம்பவம்

உங்களோடு நான் (ஆசிரியர்) பகிர்ந்துகொள்ள விரும்புகின்ற முதலாம் சம்பவம், ஒரு பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கோரமான துப்பாக்கிச் சூடு சம்பவமாகும்; அது Pennsylvania/பென்சில்வேனியாவில், நிக்கெல் சுரங்கங்கள் காணப்படும் கிராமங்கள் ஒன்றில் சம்பவித்தது; அது அமிஷ்/Amish சமுதாயத்தினர் வாழும் கிராமப்பகுதியாகும். Amish Grace/அமிஷின் கருணை எனும் பெயரில் 2010-ஆம் வருடம் திரைப்படம் ஒன்று இயற்றப்பட்டது. அந்தத் திரைப்படத்தைச் சுருக்கமாக நான் (ஆசிரியர்) பகிரப்போகின்றேன். அத்திரைப்படத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சிலரின் பெயர்களுக்கு மாற்றுப்பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அமிஷின் கருணை எனும் திரைப்படமானது, 6 முதல் 13-வயதை உடைய சிறுமிகள் சுடப்பட்ட சம்பவத்தைக் காட்சிப்படுத்தியுள்ளது. 2006-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நிகழ்த்தப்பட்டிருந்த துப்பாக்கிச் சூட்டில், அமிஷ் பள்ளிக்கூடத்தின் ஓர் அறையில் ஐந்து சிறுமிகள் இறந்து கிடந்தனர். இங்கு மிகவும் பிரம்மிக்கத்தக்க விஷயம் என்னவெனில், அந்த அமிஷ் சமுதாயத்தினர் வெளிப்படுத்தின அன்பு மற்றும் மன்னிப்பின் ஆவியே ஆகும். துப்பாக்கிச் சூட்டை நடத்தினவர், அமிஷ் சமுதாயத்தினருக்கு நன்கு அறிமுகமானவராகக் காணப்பட்ட Charlie Roberts/சார்லி ராபர்ட்ஸ் எனும் மனிதனாவார். இவர் அமிஷ் சமுதாயத்தினரின் பால் பண்ணைகளிலிருந்து, பாலை வாங்கி வரும் பால் வண்டியின் ஓட்டுனராவார். சிறுமிகளைச் சுட்ட பிற்பாடு இவர் தற்கொலை செய்துகொண்டார்; மேலும், தான்

இப்படிச் செய்ததற்குரிய காரணத்தைக் கடிதத்தில் எழுதி மரித்திருக்கின்றார். அக்கடிதத்தில், தனது பிஞ்சு குழந்தையாகிய மகள் 1997-ஆம் வருடத்தில், பிறந்த அதே நாளில்தானே மரித்துப்போன காரணத்தின் நிமித்தம், தேவன்மீது தான் கோபத்தில் இருந்ததால், இப்படி செய்ததாக எழுதியுள்ளார். காவல்துறையினரும், செய்தித்துறையினரும் சம்பவ இடத்திற்கு வந்து குவிந்தனர். பாதிக்கப்பட்ட குடும்பத்தினரில் ஒரு குடும்பத்தினர் தங்கள் மகளாகிய Mary Beth/மேரி பெத், சுட்டுக் கொல்லப்பட்டுள்ள சிறுமிகளில் ஒருவளாக இருக்கின்றாள் என்று அறிந்துகொண்டனர். அதே நாளில் அமிஷ் சமுதாயத்தினரின் பெரியவர்கள், Mrs. Amy Roberts/திருமதி ஏமி ராபர்ட்சை (கொலை புரிந்தவரின் மனைவியை) சந்திக்க வேண்டும் என்று முடிவெடுத்து, போய்ச் சந்திக்கின்றனர். அமிஷ் சமுதாயத்தின் பெரியவர்கள் திருமதி ஏமி ராபர்ட்சிடம், தாங்கள் சார்லியை மன்னிப்பதாகத் தெரிவிக்கின்றனர்; ஆனால் இதை திருமதி ஏமி ராபர்ட்சால் நம்பவே முடியவில்லை. தனது கணவன் செய்திருக்கும் குற்றத்தை அவர்களால் எப்படி மன்னிக்க முடிந்தது என்பதை அவளால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அமிஷ் சமுதாயத்தின் பெரியவர்கள் பின்வருமாறு: "நீங்கள் உங்கள் கணவனையும், உங்கள் பிள்ளைகள் அவர்களது தகப்பனையும் இழந்துள்ள இந்த இழப்பின் நிமித்தம், உங்களுக்காக வருந்துகின்றோம். உங்களுக்காகவும் நாங்கள் துயரப்படுகின்றோம்" என்று தெரிவித்தனர். தங்கள் சொந்த துயரங்களையும், தங்கள் சொந்த காயங்களையும் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, அதைத் தாண்டி மற்றவர்களுக்காகத் துயரப்படும் மனநிலையினை வெளிப்படுத்தி, மற்றவர்களுடைய பிரச்சனையை, அவர்கள் பார்வையிலிருந்து பார்க்கின்றவர்களாகவும் காணப்பட்டனர். பக்கத்து கிராமங்களில் இருந்தவர்கள், இந்தத் துயர நிகழ்வில் அமிஷ் சமுதாயத்தினருக்கு உதவிக்கரங்களை

நீட்டுவதற்குத் திரண்டுவந்தனர். அமிஷ் கிராமத்தினரிடம் வண்டி வசதிகள் இல்லாதிருந்ததினால், மருத்துவமனை போன்ற இடங்களுக்குப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் போய்வர, காரில் ஏற்றிச்செல்லும் உதவிகளைப் புரிய, பக்கத்து ஊர் ஜனங்கள் முன்வந்தனர். திருமதி ஏமி ராபர்ட்சும் ஓட்டுனராக உதவி செய்ய முன்வந்தாள். Rachel/ராகேல் என்ற பெண்மணியின் இரண்டு பெண் பிள்ளைகளில், ஒரு பிள்ளை மரித்தும், இன்னொரு பிள்ளையாகிய Rebecca/ரெபெக்காள் கோமா நிலையிலும் காணப்பட்டாள். ராகேலின் தோழியாகிய Ida Graber/ஐடா கிரேபர், மரித்துப்போன சிறுமியாகிய மேரி பெத்தின் தாயாவாள். கோமா நிலையில் காணப்பட்ட ரெபெக்காள் மருத்துவமனையில் காணப்படுகையில், மருத்துவமனைக்குச்செல்ல அவள் தாயாகிய ராகேலும், தோழியாகிய ஐடா கிரேபரும் தயாராகக் காணப்பட்டனர். இவர்களை மருத்துவமனைக்குக் கூட்டிச்செல்ல வேண்டிய வண்டியை, திருமதி ஏமி ராபர்ட்ஸ் (கொலைபுரிந் தவரின் மனைவி) ஓட்டிவந்தாள். ராகேலும், ஐடாவும் வண்டியில் ஏறினார்கள்; வண்டியை திருமதி ஏமி ராபர்ட்ஸ் ஓட்டிச் சென்றாள். திடீரென ஐடா வண்டியை நிறுத்தச் சொல்லி, வண்டியை விட்டு இறங்கிவிடுகின்றாள். ராகேலும் வெளியே இறங்கி, ஐடாவிடம் என்னவாயிற்று என்று வினவுகின்றாள். தன் மகளைக் கொலைசெய்த மனுஷனுடைய மனைவியின் உதவியால், தான் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்படும் காரியத்தினை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஐடா, ராகேலிடம் குமுறுகின்றாள். ராகேலோ: "நானும் ஒரு மகளைப் பறிகொடுத்திருக்கின்றேன்; ஆனாலும் என் **இருதயத்தை** நான் அன்புக்கும், பகைமைக்கும் இடையிலான ***போர்க்களமாக*** மாற்றப்போவதில்லை. எனக்கும் மிகவும் வலிக்கின்றது; எனினும் ஐடா, நாம் அன்பைத்தான் தெரிவு செய்ய வேண்டும்" என்று கூறுகின்றாள். அன்றைய தினமே ஐடா கிரேபரும், அவள்

கணவனாகிய கிதியோனும், துயரத்திலிருந்து வெளிவருவதற்கு உதவும் ஓர் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கெடுப்பதற்கென்று, உள்ளூரில் காணப்பட்ட தீயணைப்பு நிலையத்திற்குப் போனார்கள்; அதில் திருமதி ஏமி ராபர்ட்சும் பங்கெடுக்க வேண்டியிருந்தது; மறுபடியுமாக திருமதி ஏமி ராபர்ட்ஸ், எப்படி அவர்களால் "தனது கணவனாகிய சார்லியை" மன்னிக்க முடிந்தது என்பதைத் தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று தெரிவிக் கின்றாள். அதற்குக் கிதியோன் பின்வருமாறு: "எங்கள் மன்னிப்பிற்கும், சார்லிக்கும் சம்பந்தமில்லை. நாங்கள் மன்னித்துவிட்டோம் என்று சொல்லும்போது, மறந்துவிட்டோம் என்பதாகாது; குற்றத்தைப் பொறுத்துக்கொள்கின்றோம் என்பதும் இல்லை. இன்னுமாக ஒருவேளை கோபத்தையும், ஆத்திரத்தையும் வளரவிட்டுக்கொண்டே இருப்போமானால், உண்மையில் நாங்கள்தான் கஷ்டப்பட்டு/தண்டிக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்களாக இருப்போம் என்பதையும் நாங்கள் அறிவோம்" என்று பதிலளித்தார். இப்படியாகப் பேசிக்கொண்டி ருக்கையில் ராகேல், ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தீயணைப்பு நிலையத்திற்கு வந்து, தன்னோடு கூட மருத்துவமனைக்கு வரும்படிக்குக் கிதியோனிடமும், ஐடாவிடமும் கேட்டுக்கொள்கின்றாள்; காரணம் கோமா நிலையில் காணப்பட்ட தனது மகள் ரெபெக்காள் விழித்துவிட்டதாகவும், தங்களிடம் ஏதோ ஒன்றைச் சொல்வதற்குத் தங்களைத் தேடுவதாகவும் கிதியோன் மற்றும் ஐடாவிடம் ராகேல் தெரிவிக்கின்றாள்.

சிறுமிகள் அனைவரையும் சார்லி ராபர்ட்ஸ் சுடுவதற்குச் சற்று முன்பு, கிதியோன் மற்றும் ஐடாவின் *மகளாகிய மேரி பெத், எவ்வாறு சார்லி ராபர்ட்சுக்காக ஜெபம் ஏறெடுத்தாள்* என்பதைக் கோமாவிலிருந்து விழித்துக்கொண்ட ரெபெக்காள் மருத்துவ மனைக்கு வந்த மூவரிடமும் பகிர்ந்துகொள்கின்றாள். இதைக்

கேட்ட மாத்திரத்தில் வலியும், ஆத்திரமும் அந்தப் பெற்றோருக்கு மறைந்துபோனது. தனது மகளைச் சார்லி கொலைசெய்யப் போகிறபோதும்கூட, சார்லிக்காகத் தனது மகளுடைய இருதயத்தில் அன்பு காணப்பட்டிருந்திருக்கின்றது என்பதை ஐடா உணர்ந்துகொள்கின்றாள்.

சில நாட்களுக்குப் பிறகு, சார்லி ராபர்ட்ஸ் அடக்கம் செய்யப்பட வேண்டிய நேரம் வந்தது. சார்லியின் மனைவியும், குழந்தைகளும் மாத்திரம் கல்லறையில் காணப்பட்டனர். அவர்கள் சென்றுகொண்டிருந்த சபையின் அங்கத்தினர்களில் எவரும் அவருடைய அடக்கத்திற்குக் கலந்துகொள்ளவில்லை; அவரது ஊர் ஜனங்கள் எவரும், அவருடைய அடக்கத்திற்குக் கலந்து கொள்ளவில்லை. திடீரென அமிஷ் கிராமத்திலிருந்து பெரும் திரளான ஜனங்கள் கல்லறைக்குள் வந்து, திருமதி ஏமி ராபர்ட்சோடும், அவளது பிள்ளைகளோடும்கூட நின்று கொண்டனர். அடக்கத்தை நடத்திக்கொடுத்த ஊழியக்காரன்: "நமக்கு ஏற்பட்டுள்ள வலிகளுக்காக, நாம் பழிவாங்க முற்படாமல் இருக்கையில்.... நம்முடைய இருதயங்களை நாம் மன்னிப்பு எனும் சுகமளிக்கும் வெளிச்சத்திற்குத் திறக்கையில்.... பின்னர் இருள் மறைந்துபோய்விடுகின்றது; தீமையும் இல்லாது போகும்" என்ற சில வார்த்தைகளை அடக்க ஆராதனையின் போது கூறியுள்ளார். இந்த ஆச்சரியமான சம்பவம், "மன்னிக்கப்பட முடியாதவைகள் என்று நான் (ஆசிரியர்) ஒரு காலத்தில் எண்ணியவைகள்கூட, மன்னிக்கப்படக் கூடியவைகளாக இருக்கின்றன" என்பதை எனக்குக் காண்பித்து உதவியுள்ளது. கோரமான அல்லது மிகுந்த காயத்தைக் கொடுக்கும் சம்பவங்கள் எத்தகைய தாக்கத்தை நம் மனங்களிலும், நம் இருதயங்களிலும் உண்டுபண்ணலாம் என்பது தொடர்புடைய விஷயத்தில், **மன்னிப்பு என்பது** ஒருவகை

முடிவாக/தெரிவாக/choice இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள இச்சம்பவம் எனக்கு உதவிசெய்துள்ளது. **மன்னிப்பு என்பது, நம்முடைய சொந்த நன்மைக்காக நாம் எடுத்துக்கொள்ளும் ஒரு முடிவாக முதலாவது காணப்படுகின்றது.** அது குற்றவாளியின் மன்னிப்பு கோருதலை அல்லது மனம் வருந்துதலைச் சார்ந்து இருப்பதில்லை.

## இரண்டாம் சம்பவம்

இன்னொரு கோரமான துப்பாக்கிச் சூடு 2012-ஆம் ஆண்டு, டிசம்பர் 14-ஆம் தேதி அன்று காலை வேளையில் நடைபெற்றது. இச்சம்பவத்தின்போது, 20-வயதை உடைய ஒருவன் New town/நியூ டவுனில் உள்ள Sandy Hook தொடக்க பள்ளிக்குள் பிரவேசித்தான். அவனிடம் பெரிய துப்பாக்கியும், இரண்டு கைத்துப்பாக்கிகளும் இருந்தன. அவன் ஆறு மற்றும் ஏழு வயதில் காணப்பட்ட 20-பிள்ளைகளையும், பள்ளியின் தலைமை ஆசிரியரையும், சில ஆசிரியர்களையும், மற்ற சில பணியாளர்களையும் சுட்டுக்கொன்றான். இத்தகைய கொடுமையான குற்றத்தின் விஷயத்தில், தங்கள் சிறு மகளையோ, மகனையோ பறிகொடுத்துள்ள பெற்றோர் எப்படிக் கொந்தளித்து எழுவார்கள் என்பது உங்களுக்கே தெரியும். Robbie Parker/ராபி பார்க்கர் மற்றும் அவரது மனைவியும், இந்தக் கோர தாக்குதலில் ஆறு வயதான, தங்கள் மகள் Emily/எமிலியைப் பறிகொடுத்து நின்றனர். அடுத்த நாள் இரவு, கண்ணீர் மல்க, இந்தத் தம்பதியினர்தான் முதலாவதாக செய்தித்தாள்களுக்குப் பேட்டி கொடுத்தார்கள். ராபி பார்க்கர் பின்வருமாறு தனது பேட்டியில்: "இந்தத் துப்பாக்கிச் சூட்டினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்காக, எங்களது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இது மிகவும் துயரமான சம்பவம். பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்காக, எங்களது பரிவும், ஜெபங்களும் காணப்படுகின்றது என்பதை அனைவரும் அறிய

வேண்டுமென்று விரும்புகின்றேன். இதைச் சொல்லும்போது, நான் துப்பாக்கிச் சூடு நடத்தினவனின் குடும்பத்தையும் சேர்த்துத்தான் சொல்லுகின்றேன். இந்த அனுபவம் குற்றவாளி யாகிய உனக்கும் எவ்வளவு கடினமானது என்பது எனக்குத் தெரியும்; ஆகையால் உனக்கும், எனது குடும்பத்தின் அன்பும், ஆதரவும் உண்டு என்பதை நீயும் அறிந்துகொள்ள விரும்பு கின்றேன். ஒருவேளை எனது மகள் எமிலி உயிரோடு இருந்திருப்பாளானால், அவள்தான் இங்கு முதலாவது வந்து நின்றுகொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்குத் தனது அன்பையும், ஆதரவையும் கொடுத்திருப்பாள்; ஏனெனில் அவள் அப்படிப் பட்ட பிள்ளைதான்; இதற்குக் காரணம் நானும், என் மனைவியும் அவளை அப்படித்தான் வளர்த்திருந்தோம் என்று சொல்லமாட்டேன். அவளிடமுள்ள அந்தப் பண்புகள், அவளது பரமபிதாவினால் அவளுக்குக் கொடுக்கப்பட்டவையாகும். ஒரு பக்கம் கடுந்துயர் எங்கள் இருதயத்தைக் கனக்கப்பண்ணுகையில், எமிலி சொற்ப காலம் இப்பூமியில் வாழ்ந்தபோது, அவள் எப்படிப்பட்ட வியக்கத்தக்க நபராக இருந்தாள் என்றும், அவளால் எத்தனை ஜீவியங்கள் தொடப்பட்டுள்ளன என்றும் நாங்கள் யோசித்துப்பார்த்து, ஆறுதல் அடைகின்றோம். எமிலி அறிவுள்ள, திறமையுள்ள மற்றும் மிகவும் அன்புள்ள பிள்ளையாவாள். அவள் எப்போதுமே எல்லோரைக்குறித்தும் அன்பாகப் பேசுவாள். மேலும், நமக்கு விருப்பமானவைகள் எதையும் தெரிவு செய்வதற்கும், அதைச் செயல்படுத்துவதற் குமான **சுயாதீனம்** நம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சுயாதீனத்தைத் தேவன் நம்மிடமிருந்து எடுத்துப் போடுகிறதில்லை. அந்தச் சுயாதீனமானது, துப்பாக்கிச் சூடு நடத்தினவனுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தச் சுயாதீனத்தினாலேயே, அவன் கொல்ல முடிவெடுத்துள்ளான். எனக்குக் கோபமில்லை; ஏனெனில் இப்போதும்கூட என் குடும்பத்தையும், என் மனைவியையும், எனது மற்றப் பெண் பிள்ளைகளையும் கவனமாய்ப் பார்த்துக்கொள்வதற்குரிய சுயாதீனம் என்னிடத்தில் இன்னமும் இருக்கின்றது; வேறு

யாருக்கேனும் எந்த ஒரு தருணத்திலும், எந்த ஓர் இடத்திலும் உதவி செய்யத்தக்கதாக, எதையேனும் செய்வதற்குரிய எனது சுயாதீனம் இன்னமும் என்னிடம் இருக்கின்றது. இப்படிச் செய்வதற்கே நானும் விரும்புவேன். இன்னுமாக இங்கு எனக்குச் சம்பவித்ததிலிருந்தும், இங்கு மற்றவர்களுக்குச் சம்பவித்ததி லிருந்தும் நானும், நீங்களும் கடந்து போகையில், இச்சம்பவ மானது நாம் யார் என்பதை வெளிப்படுத்தும் சம்பவமாக இராமல், இன்னும் நாம் மேம்படுவதற்கும், இன்னும் அதிகமாய் மனதுருக்கம்கொண்ட ஜனங்களாக நாம் மாறுவதற்கும், இன்னும் அதிகமாய்த் தாழ்மைகொண்ட ஜனங்களாக நாம் மாறுவதற்கும் நம்மை ஊக்கப்படுத்தும் ஒன்றாக இருக்கட்டும்" என்று கூறினார். ராபி பார்க்கரின் இந்த ஆச்சரியமான அறிக்கையானது, காரியங்களைத் தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்ப்பதினாலும், இன்னுமாக அனைவருக்கும் சுயாதீனம் காணப்படுகின்றது எனும் கண்ணோட்டத்திலிருந்து பார்ப்பதி னாலும், தீமையின் அனுமதி காலத்தினுடைய கண்ணோட்டத் திலிருந்து பார்ப்பதினாலும் மனக்காயங்களுக்குச் சுகம் உண்டாகுகின்றது என்றும், மன்னிக்க முடியும் நிலை உருவாகுகின்றது என்றும் நிரூபிக்கின்றது; மேலும் துயரம் குற்றவாளியின் ஜீவியத்திலும், அவனது குடும்பத்தினரின் ஜீவியத்திலும்கூட ஏற்பட்டுள்ளது என்று பார்ப்பதன் மூலம், பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் சொந்த காயம் மற்றும் வலியினைத் தாண்டி யோசித்துப்பார்க்க முடிபவர்களாகுகின்றனர் என்பதும் ராபி பார்க்கரின் அறிக்கையினால் நிரூபிக்கப்படுகின்றது. கடுமையான மற்றும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கும் குற்றங்கள் செய்யப்படும் தருணங்களில், மேலே கூறப்பட்டுள்ளபடி செய்வது மிகவும் கடினமாக இருக்கும். இயேசு தம்முடைய ஊழியத்தின் போதும், தமது பூமிக்குரிய ஜீவியத்தின் இறுதி காலங்களின் போதும், அவர் கடந்துசென்ற அனுபவங்களை நாம் நினைவுகூருவோமானால், இது நமக்கு உதவியாக இருக்கும்.

## மூன்றாம் சம்பவம்

மரணத்தில் தங்கள் அன்புக்குரியவர்களைப் பறிகொடுத்த சம்பவங்களைத் தொகுத்து வழங்கும் புத்தகம் ஒன்றினை நான் (ஆசிரியர்) வாசித்திருக்கின்றேன். அப்புத்தகத்தின் பெயர் "Vanishing Grace: Whatever happened to the Good News?" (மறைந்துபோகும் கருணை: நற்செய்திக்கு என்னவாயிற்று?) என்பதாகும். இப்புத்தகத்தின் ஆசிரியர் Philip Yancey ஆவார். இவர் மிகவும் பிரபலமான அமெரிக்க நாட்டு கிறிஸ்தவ எழுத்தாளர் ஆவார். இவர் தனது புத்தகத்தில் மால்கம் கிலாடுவெல் எனும் மனுஷன், மீண்டும் தனது இறை நம்பிக்கைக்குள்ளாகத் திரும்புவதற்கு உதவின சம்பவத்தைக் குறித்துப் பதிவுசெய்துள்ளார்; அவர் எழுதினதாவது:

2013-ஆம் வருடத்தின் இறுதியில், தி நியூ யார்க்கர்/The New Yorker பத்திரிக்கையின் எழுத்தாளர் Malcolm Gladwell/ மால்கம் கிலாடுவெல் அவர்கள், தனது இறை நம்பிக்கையை மீண்டும் கண்டடைந்ததைக்குறித்து வெளிப்படையாக அறிக்கையிட்டுள்ளார். கனடாவின் வினிபெக் நகரில், பாலியல் துன்புறுத்தலுக்குப் பலியான மகளின் (Mennonite/ மெனோனைட் சமுதாய) பெற்றோரைச் சந்தித்ததே, இதற்குத் தூண்டுதலாக அமைந்ததென மால்கம் கிலாடுவெல் தெரிவித்துள்ளார்.

அந்த நகரின் வரலாற்றிலேயே மிகப்பெரிய தேடுதல் வேட்டை நடத்தப்பட்ட பிறகு, காவல்துறையினர் அந்த இளம் பெண்ணின் உடலை ஒரு கொட்டகையில் கண்டுபிடித்தனர். அவளது கைகளும், கால்களும் கட்டப்பட்டிருந்தன; உடல் குளிரில் உரைந்திருந்தது.

அந்தப் பெண்ணின் இறுதிச்சடங்குகள் முடிந்த உடனே நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில், அந்தத் தந்தை: “யார் இந்தக் கொடுமையைச் செய்தவர் அல்லது செய்தவர்கள் என்பதை நாங்கள் அறிய விரும்புகின்றோம்; ஏனென்றால் இந்த

மனிதர்களின் ஜீவியங்களில் இல்லாத அன்பை, அதாவது அந்த அன்பு என்ன என்று அவர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம்'' என்றார்; மேலும் அந்தத் தாயார்: ''அந்த மனிதனை மன்னித்துவிட்டேன் என்று என்னால் இந்த ஒரு தருணத்தில் சொல்ல இயலாது என, 'இந்த ஒரு தருணத்தில்' எனும் வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்துக் கூறினாள் . . . நாம் அனைவருமே வாழ்க்கையில் ஏதாவது தவறுகள் செய்த மனிதர்கள்தான் அல்லது நாம் அனைவருமே தவறுகள் செய்ய வேண்டுமென்று நினைத்த மனிதர்கள்தான்'' என்றும் கூறி முடித்தாள்.

இயல்பாகக் கோபமும், பழிவாங்கும் உணர்வும் வரவேண்டிய சூழ்நிலையில், இந்தத் தம்பதியினரின் முற்றிலும் வேறுபட்ட/அசாதாரணமான பதில் மால்கம் கிலாடுவெல்லை, அவரது மெனோனைட் கிறிஸ்தவ விசுவாசத்தை/வேர்களை நோக்கி மீண்டும் இழுத்தது. மால்கம் கிலாடுவெல் பின்வருமாறு: "Cliff/கிலிப் மற்றும் Wilma Derksen/வில்மா டெர்க்சன் தம்பதியினரின் தோட்டத்தில் நான் அமர்ந்திருந்தபோது, ஏதோ ஒன்று என்னைப் பாதித்தது. தங்கள் விசுவாசத்தினால் வலுவூட்டப்பெற்ற ஜனங்களைப்பற்றி ஏதேனும் சுயசரிதை புத்தகத்தில் வாசித்தறிவது என்பது வேறு; ஆனால் முற்றிலும் அசாதாரணமான ஏதோ ஒன்றைச் செய்ய முடிந்தவனாகக் காணப்படும் ஒரு சாதாரணமான மனிதனை, ஒரு சாதாரணமான வீட்டில்வைத்து நேரடியாய்ச் சந்திப்பது என்பது முற்றிலும் வேறுபட்ட காரியமாகும். இவர்களது மகள் கொலைசெய்யப் பட்டிருக்கின்றாள்; ஆனால் டெர்க்சன் தம்பதியினர் செய்த முதல் விஷயம், செய்தியாளர் சந்திப்பில் மன்னிப்பு பற்றிப் பேசுவதுதான். நம்மில் அநேகருக்கு ஆவியின் போராயுதங்களைக் காண்பதிலுள்ள சிரமம் என்னவெனில், அவைகளை எங்கே தேடவேண்டுமென்று தெரியாமல் இருப்பதேயாகும் அல்லது பூமிக்கடுத்த காரியங்களினால் திசை திருப்பப்படுவதினாலேயே ஆகும். ஆனால் இப்பொழுது அவற்றைக்

கண்டுகொண்டேன். இனி நான் பின்மாற்றத்திற்குள்ளாகப் போகமாட்டேன்" என்று கூறியுள்ளார்.

இந்த உலக ஜனங்கள் பல நிலைகளில், அதாவது இன ரீதியாக, பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக, மத ரீதியாக எனப் பிளவுபட்டுள்ள நிலையில் காணப்படுகையில், கிறிஸ்தவ கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் தனிமனிதர்களாகிய நாம், அன்பு மற்றும் மன்னிப்பின் பாதையில் நடந்துசெல்வதன் மூலம், இப்பிரிவினைகளுக்கும் அப்பால் பார்க்க முடிபவர்களாகி, இப்பிளவுகளுக்கு இடையே பாலமிட முடிபவர்களாகுவோம் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

## நான்காம் சம்பவம்

1990-களின் முற்பகுதியில், தென்னாப்பிரிக்காவில், இனவெறி பாரபட்சம் கொண்ட **(1*Apartheid system)** "இன பிரிவினை முறை" முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, சுயாதீனமான பொதுத்தேர்தல் மூலம் பெரும்பான்மை ஆட்சிக்கு மாற்றப்பட்டது. நெல்சன் மண்டேலா என்ற கறுப்பர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இத்தருணத்தில் கலவரம் வெடிக்குமென அனைவரும் எதிர்பார்த்தனர்.

பிப்ரவரி 2000-ஆம் ஆண்டு, டொரண்டோ பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையில், தென்னாப்பிரிக்காவின் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு/**Desmond Tutu** - அவர்கள், "எப்படி மன்னிக்க வேண்டும் என்பதை உலகத்திற்குத் தென்னாப்பிரிக்கா கற்பிக்கட்டும்" என்ற தலைப்பில் பேசினார். அவர் உரையாற்றியதில் சில பகுதிகள் இங்கே:

தென்னாப்பிரிக்க விவகாரங்களில் தேர்ச்சிபெற்ற மாணவர்களிடம், (இன பிரிவினை முறை முடிவுக்கு வந்து, சுயாதீனமான பொதுத்தேர்தல் கொண்டுவரப்பட்டபோது) தென்னாப்பிரிக்காவில் என்ன நடக்கும் என்று கேட்கப்பட்ட போது, கிட்டத்தட்ட அனைவரும் மிக மோசமான பேரிடர்

சூழ்ந்துகொள்ளும் என்றே கணித்தார்கள்; நிச்சயமாக, பெரியள வில் இரத்தவெள்ளம் ஓடும் என்றே எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அது நடக்கவில்லை. மாறாக, **1994**-ஆம் ஆண்டு ஏப்ரல் **27**-ஆம் தேதி, அனைத்து தென்னாப்பிரிக்க மக்களும் நீண்ட வரிசைகளில், வாக்குச்சாவடிகளை நோக்கிச் செல்வதை உலகம் வியப்புடனும், உண்மையில் மரியாதையுடனும் கண்டு களித்தது. மேலும், **1994**-ஆம் ஆண்டு மே **10**-ஆம் தேதி நெல்சன் மண்டேலா, தென்னாப்பிரிக்காவின் முதல் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபராக பதவியேற்பதை உலகம் மகிழ்ச்சியுடன் கண்டது.

இரத்தம் சிந்தப்படாமல், அமைதியான முறையில் அநீதியிலிருந்தும், ஒடுக்குமுறையிலிருந்தும் இத்தேசம் சுதந்தரத்திற்குள்ளும், ஜனநாயகத்திற்குள்ளும் அடியெடுத்து வைப்பதைக் கண்ட உலகம், இதை ஓர் அற்புதம் என்று விவரித்தது.

இன்னுமாக, ஒரு கறுப்பர் தலைமையிலான அரசு ஆட்சிக்கு வரும்வரை காத்திருங்கள். அப்போது, கடந்தகாலத்தில் மிகுந்த கொடுமைகளினால் துன்புறுத்தப்பட்ட இந்தக் கறுப்பர்கள், வெள்ளையர்கள்மீது மிகக் கொடிய பழிவாங்கும் செயலில் ஈடுபடுவார்கள் என்று சிலர் கூறினார்கள்.

ஆனால் இந்த எதிர்பார்ப்பு தவறாகவே இருந்தது. மாறாக, உலகம் இதுவரை கண்டிராத ஒன்றைக் கண்டது. தென்னாப் பிரிக்க மக்களுக்கு மிகக் கொடூரமான குற்றங்களைச் செய்த சிலர், தங்கள் செயல்கள் குறித்த முழு உண்மைகளை அறிக்கை யிட்டதன் காரணமாக, **2* "உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம்"** அவர்களுக்கு மன்னிப்பு வழங்கினதை உலகம் கண்டது. பழிவாங்கும் சுழற்சியில் சிக்கிக்கொள்ளாமல், இந்தப் புதிய தேசம் ஒப்புக்கொள்ளும் வாக்குமூலம், மன்னிப்பு மற்றும் நல்லிணக்கம் என்ற கடினமான பாதையைத் தேர்ந்தெடுத்தது. இது உலகிற்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்தது.

**3* ஆப்ரிக்க தேசிய காங்கிரஸின்** நான்கு உறுப்பினர்கள், காவல்துறையினரால் தாக்கி, கொடூரமாகக் கொலை செய்யப்

பட்டனர்; அவர்களின் சிதைந்த உடல்கள் எரிந்த காரில் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த 4 உறுப்பினர்களில் ஒருவரின் மகள் **உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையத்தில்** தனது கதையைச் சொல்ல வந்தாள். தந்தை இறந்த பிறகும், காவல்துறை தனது தாயாரையும் குழந்தைகளையும் தொடர்ந்து துன்புறுத்துவதாகக் கூறினாள். அவள் பேசி முடித்ததும், இதைச் செய்தவர்களை மன்னிக்கமுடியுமா என்று அவளிடம் கேட்கப்பட்டபோது, அவளோ: "மன்னிக்க விரும்புகின்றோம். யாரை மன்னிக்க வேண்டும் என்றுதான் எங்களுக்குத் தெரியவேண்டும்" என்றாள்.

தென்னாப்பிரிக்கா நாடு **4* நியூ ரம்பெர்க் நகரின்** வழிமுறையையும்/பாதையையும் பின்பற்றவில்லை, அதாவது இதுபோன்ற கொடுமைகள் செய்தவர்களை நீதிக்குக் கொண்டுவருவதற்கான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவில்லை.

இன்னுமாக, எந்த நிபந்தனையும் முன்வைக்காமல், அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கி, குற்றங்களை மூடிமறைத்துவிடும் அணுகுமுறையையும் தென்னாப்பிரிக்கா நிராகரித்தது. மாறாக, குற்றவாளிகள் தங்கள் குற்றங்கள்குறித்த உண்மையை வாக்குமூலமாக தெரிவித்தால்மட்டுமே அவர்களுக்கு மன்னிப்பு வழங்கும் நடுநிலைப் பாதையை தென்னாப்பிரிக்கா தேர்ந்தெடுத்தது.

அப்படியானால் "நீதி வேண்டாமா?" என்று சிலர் கேட்டார்கள். அதற்கு, தண்டனை அளிக்கும் நீதி மட்டுமே நீதி இல்லை என்றும், மீட்டெடுக்கும் நீதி என்ற நீதியும் உள்ளது என்றும் தென்னாப்பிரிக்கா பதிலளித்தது.

இப்படியாக டெஸ்மண்ட் டுட்டு தனது உரையை நிறைவுசெய்தார்.

<u>தகவல் குறிப்பு (புற சேர்க்கை):</u>

***1*Apartheid system*/அபார்ட்ஹைட் முறை:** தென்னாப்பிரிக்காவில், 1948-ஆம் ஆண்டு அந்நாட்டின் வெள்ளை அரசாங்கத்தால்

அமல்படுத்தப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான இனவெறி பிரிவினை முறையே அபார்ட்ஹைட் முறையாகும். இது கறுப்பு தென்னாப்பிரிக்கர்களுக்கு வாக்குரிமை மறுப்பது உட்பட பல்வேறு ஒடுக்குமுறை கட்டுப்பாடுகளை அவர்கள்மீது விதித்தது. பல ஆண்டுகளாக நடந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், 1994-ஆம் ஆண்டில் அபார்ட்ஹைட் முறை முடிவுக்கு வந்தது.

***2* உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம்:*** தென்னாப்பிரிக்காவில் இனவெறி ஆட்சி முடிவுக்கு வந்தபிறகு, அங்கு நிறுவப்பட்ட நீதிமன்ற வகையைச் சார்ந்த ஓர் அமைப்புதான் "உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம்." இது இனவெறி ஆட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இதன் பெயரில் குற்றங்களைச் செய்தவர்கள் ஆகிய இரு தரப்பினரிடமிருந்தும் வாக்குமூலங்களைப் பெறுவதற்காக உருவாக்கப்பட்டது. டெஸ்மண்ட் டுட்டு இந்த ஆணையத்தின் தலைவராக இருந்தார்.

***3* ஆப்ரிக்க தேசிய காங்கிரஸ்:*** இது தென்னாப்பிரிக்காவின் தேசியவாத கறுப்பர் அரசியல் கட்சியாகும். இதனை நெல்சன் மண்டேலா தலைமைத் தாங்கினார்.

***4* நியூ ரம்பெர்க்:*** தென் ஜெர்மனியில் உள்ள நகரம். இங்கு, நாசிபோர் குற்றவாளிகள் நீதிமன்றத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சகோதர சகோதரிகளே நம்முடைய தேவனைப் பொருத்தமட்டில், நீதி என்பது மீட்பின் ரீதியில் உள்ளதே ஒழிய, பழிவாங்கும் ரீதியில் இல்லை. மனுக்குலத்திற்கான அவரது முழுத்திட்டமும், தம் சிருஷ்டிகளுடன் அவர் பெற்றிருக்க விரும்பும் உறவினை மீட்டெடுப்பதற்காகவும், ஜனங்கள் ஒருவரோடொருவர் கொண்டிருக்க வேண்டுமென அவர் விரும்பும் உறவினை மீட்டெடுப்பதற்காகவும்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தினுடைய மிக வல்லமையான பாகம், பாவங்களையும், காயங்களையும், குற்றங்களையும் மன்னிப்பதுதான்; இது இயேசுவின் பாவநிவாரண பலியினால் சாத்தியமாயிற்று.

## ஐந்தாம் சம்பவம்

பல வருடங்களுக்கு முன்னதாக நான் (ஆசிரியர்) வாசித்த சம்பவத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். அச்சம்பவமானது எவ்வளவு தூரம் மன்னிப்பும், ஒப்புரவாகுதலும் சேர்ந்து செல்லமுடியும் மற்றும் செல்லவேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றதாக இருக்கும். அது தங்கள் 18-வயது மகனை இழந்த பெற்றோர் பற்றின சம்பவமாகும்; குடிபோதையில் வாகனம் ஓட்டிய ஒருவன், இவர்களது மகனின் வாகனம் வரும் தடத்தில் திசைமாறி வந்து, நேருக்கு நேர் மோதி, விபத்து ஏற்பட்டு, இவர்களது மகன் உயிரிழந்தான். குடிபோதையில் வாகனம் ஓட்டியவன் சிறு காயங்களுடன் உயிர் பிழைத்தான். அந்தத் தாயார், ஒரு கிறிஸ்தவ பெண்மணியாகவும், சகல ஜனங்களையும் நாம் அன்புகூர வேண்டும் என்றுள்ள கருத்தை உறுதியாக நம்பினவளாகவும் காணப்பட்டாள். ஆனால் குடிபோதையில் வாகனம் ஓட்டி வந்தவன்மீது, அந்தத் தாயாருக்குள் மிகக் கடுமையான வெறுப்பின் உணர்வுகள் உருவாக ஆரம்பித்தது. முதல் கட்ட விசாரணையின்போது, அவனை நீதிமன்றத்தில் கண்ட மாத்திரத்தில், அவள் மனதில் இருந்த வெறுப்பின் உணர்வுகள் இன்னும் அதிகரித்தது. வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தபோது, அவனுக்குச் சிறை தண்டனை வழங்கப்படாமல், மாறாக ஐந்து வருட நிபந்தனை கால தண்டனை மட்டுமே விதிக்கப்பட்டது. நிபந்தனை கால விதிமுறைகளை அவன் மீறினால் மட்டுமே அவன் சிறைக்குச் செல்ல வேண்டும். அவன் எந்த விதத்திலும் தப்பித்து விடக்கூடாது என்று அந்தத் தாய் தீவிரமாக இருந்தாள்.

மது அருந்தி வாகனம் ஓட்டுவதைத் தடுக்கும் விழிப்புணர்வு கூட்டத்தில் ஒரு பிற்பகல் வேளையில், அந்தத் தாய்

கலந்து கொண்டிருந்தபோது, அவளுடைய மகனைக் கொன்ற இளைஞன், மேடையில் ஏறிச்சென்று, ஓர் இரவன்று தான் எப்படி ஒரு குடும்பத்திற்குத் துயரத்தையும், துன்பத்தையும் கொடுத்துவிட்டான் என்பது பற்றி பேச ஆரம்பித்தபோது, அவள் ஆச்சரியப்பட்டாள். அவன் கதறியபடி, தான் சிறையில் இருக்க வேண்டியவன் என்று உண்மையாகவே சொன்னான். அந்தத் தாய் ஆச்சரியப்பட்டாள். அவள் நினைத்திருந்த கொடூர மனிதன் அவன் இல்லையோ? என்று எண்ணினாள். திடீரென அவனுக்காக மனதுருக்கம் கொண்டாள். கூட்டத்திற்குப் பிற்பாடு, அவனைச் சந்தித்து, அவனோடு பேசினாள். பின்னர் அவன் இல்லத்திற்கும் போய், அவனைச் சந்தித்தாள். அவன் தொடர்ந்து மதுபானம் அருந்திக் கொண்டுதான் வாழ்ந்துகொண்டிருந்தான். அவனது வாழ்க்கையில் வழிகாட்டுதல் தேவை என்பதை அறிந்து கொண்டாள். பைபிள் படிப்பு சம்பந்தப்பட்ட சிலவற்றை அவனுக்கு அனுப்புவதாக அவள் சொல்ல, அவனும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டான்.

சில காலத்திற்குப் பிறகு, அவன் தண்டனை கால விதிமுறைகளில் ஒன்றை மீறினதால் சிறைக்கு அனுப்பப்பட்டான். இந்தச் செய்தியைக் கேட்டு அவள் மனம் வருந்தினாள். ஆகையால் அவனைச் சிறையில் சென்று பார்த்தாள். சிறையில் அவனைக் கண்டபோது, அவனைப் பார்த்து, அவளுக்கு மிகுந்த இரக்கம் உண்டாயிற்று. அவன் செய்த செயலைக் கருத்தில் கொண்டால், இத்தகைய இரக்க உணர்வுகள் தனக்குள் தோன்றவே கூடாது என்று அவள் அறிந்திருந்தாள். அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில், அவளிடம் அவன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். அவனை ஒரு கொலைகாரனாகவோ அல்லது தனது மகனாகவோ பார்க்காமல், அன்பும், வழிகாட்டுதலும் தேவைப்படும் ஒரு மனிதனாக, அவனைப் பார்க்க ஆரம்பித்தாள். அவனை மன்னிப்பதாகத் தெரிவித்தாள். பின்னர் அத்தாயாரும் அவனிடம் மன்னிப்பு கேட்டபோது, அவன் ஆச்சரியத்திற்குள்ளானான். அவன் ஏன்? என்று வினவினபோது, "உன்னை வெறுத்ததற்காக என்னை மன்னித்துக்கொள்" என்று பதிலளித்தாள். அவனும் அவளை மன்னித்துவிட்டான். மற்றவர்களை மட்டுமல்லாமல், நம் சத்துருக்களையும் நாம் மன்னிக்க வேண்டும் என்றும்,

அவர்களுக்கும் நாம் நன்மை செய்ய வேண்டும் என்றும் இயேசு கூறியுள்ளதை அவள் நினைவுகூர்ந்தாள்.

"மது ஏற்கெனவே ஓர் உயிரைக் குடித்துவிட்டது, உன்னுடைய வாழ்க்கையையும் அது பாழாக்கிப்போட விடாதே" என்று கூறி, அவனை ஊக்குவித்து, அவனுடைய வாழ்க்கையை மீண்டும் கட்டமைக்க உதவும்படிக்கு, அவள் தொடர்ந்து சிறைக்குச் சென்று, அவனை சந்தித்து வந்தாள். அவளும், அவளது கணவரும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், அவனைத் தேவாலயத்திற்கு அழைத்துச் செல்லவும், ஒரு நாள் முழுவதையும் அவர்களுடைய மேற்பார்வையில்/custody கழிக்கவும், நீதிமன்றத்திடம் அனுமதி கேட்டுப் பெற்றுக்கொண்டனர். நான் (ஆசிரியர்) இந்தச் சம்பவத்தைக்குறித்து வாசித்தபோது, அவன் மீண்டும் சிறையிலிருந்து, நிபந்தனை கால தண்டனையின்கீழ் வெளியே வந்திருந்தான். அவனது வாழ்க்கை மாற்றம் அடைந்திருந்தது. இப்பொழுது அவன் அவளுடைய குடும்பத்தின் நெருங்கிய நண்பனாகக் காணப்படுகின்றான்.

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, இது எத்துணை ஆற்றல்மிக்க சம்பவ பதிவாகக் காணப்படுகின்றது. நானும் இதைப்போன்ற சூழ்நிலைகளுக்குள்ளாவேன் என்றால், என்னாலும் இப்படி நடந்துகொள்ள முடியும் என்று நம்புகின்றேன். கிறிஸ்து நமக்குப் போதித்துள்ள கொள்கைகளைப் பின்பற்ற முயற்சிப்போமானால், கிறிஸ்துவின் வல்லமையினால் எவைகளைச் செய்ய முடியும் என்பதை இச்சம்பவம் நமக்குக் காண்பித்துத் தருகின்றது. நாம் தேவபக்தியுள்ள ஜீவியங்களை ஜீவிக்கும்போது, மற்றவர்களையும் நம்மையும் குறித்துத் தேவன் கொண்டிருப்பதுபோன்ற ஒரு பார்வையினை, நாமும் பெற்றிருப்போம். மற்றவர்களை உலகம் பார்க்கின்ற விதத்தில் பார்ப்பதிலோ அல்லது மற்றவர்களை உலகம் நியாயந்தீர்க்கின்ற விதத்தில் நியாயந்தீர்ப்பதிலோ நாம் திருப்தியடைந்து விடக்கூடாது. மனிதர்கள் தவறுகள் செய்தாலும், அவர்களுக்குள் இருக்கும் மனிதத் தன்மையையும் மதிக்கும் உயர்ந்த பார்வை நமக்கு இருக்க வேண்டும். நமக்கும் இருக்கும் அதே அபூரண மனித சுபாவத்தைப்போன்று, மற்ற மனிதர்களிடமும் காணப்படும் மனித சுபாவத்தின் அந்தப் பாவங்களுக்கும், குறைகளுக்கும்

அப்பால் அவர்களைப் பார்க்கும் பார்வையாக, நம்முடைய பார்வை காணப்பட வேண்டும். பின்னர் இந்த உயர்ந்த பார்வைக்கு இசைவாக நாம் வாழ வேண்டும். பரிபூரணமாய்க் காணப்பட முடியாததற்காக, நாம் நம்மையும் மற்றவர்களையும் மன்னித்தாக வேண்டும். இப்பொழுது நாம் மலைப்பிரசங்கத்தில் இயேசு பேசின வார்த்தைகளுக்கு வருவோம்: "*இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம்பெறுவார்கள்*" (மத்தேயு 5:7). நம் ஒவ்வொருவருக்கும் தேவனுடைய இரக்கம் எவ்வளவு தேவையாக இருக்கின்றது. அமெரிக்க எழுத்தாளர் மாக்ஸ் லுகாடோ/Max Lucado என்பவர்: "*குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுவதினால், உலகில் உறவுகள் நிலைகொண்டிருக்கிற தில்லை, மாறாக குற்றமற்றவர்கள்/பாதிக்கப்பட்டவர்கள் இரக்கமுள்ள வர்களாக இருப்பதினாலேயே ஆகும்*" என்று எழுதியுள்ளார். குற்றம் செய்தவரை மன்னிப்பதும், அந்நபர் மீது நமக்கிருக்கும் கோபத்தைக் கைவிடுவதும் இரக்கத்தின் செயலாகும். மன்னிக்கும்போது, அது முதலாவதாக உங்களுக்கு நன்மை பயக்கும்; அது குற்றம் செய்தவருக்கும் நன்மை பயக்கும். "*சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப் படுவார்கள்*" என்று இயேசுவும் கூறியிருக்கின்றார். இவ்வசனத்தின் வார்த்தைகளைப் பின்வருமாறு விவரித்துரைக் கலாம்: "போட்டிபோடுவதற்கு அல்லது சண்டையிடுவதற்குப் பதிலாக, ஜனங்கள் எவ்வாறு ஒத்துழைக்க முடியும் என்பதை நீங்கள் ஜனங்களுக்குக் காண்பித்துக் கொடுக்கையில், நீங்கள் பாக்கியவான்களாய் இருப்பீர்கள். அப்போதுதான் உண்மையில் நீங்கள் யார் என்பதையும், தேவனுடைய குடும்பத்தில் உங்கள் இடம் எது என்பதையும் நீங்கள் கண்டுகொள்வீர்கள்." "*கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்*" என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியுள்ளார் (உரோமர் 12:18). "*உங்களாலானமட்டும்*" என்று அவர் குறிப்பிடுகின்றார். மற்றவர்களோடு சமாதானமாய் இருக்கத்தக்கதாக, நாம் எவ்வளவு தூரம் செல்ல தயாராக இருக்கின்றோம்? நமக்கோ அல்லது நம்மைச் சார்ந்தவர் களுக்கோ மற்றவர்கள் செய்த எதையும் மற்றும் எல்லாத் தப்பிதங்களையும் மன்னிக்க நாம் விருப்பமாயிருக்கின்றோமா? தம்முடைய குமாரனுடைய ஜீவனைக் கொடுப்பதன் மூலம், மன்னிப்பதற்குரிய தம்முடைய விருப்பத்தையும், மனுக்குலத்துடன்

மீண்டும் சமாதானம் கொண்டிருப்பதற்குரிய தம்முடைய வாஞ்சையினையும் தேவன் காண்பித்துள்ளார். மற்றவர்கள் நமக்குப் பண்ணியுள்ள பாதகங்கள் மிகவும் பெரிதாக இருக்கின்றபோதிலும், அவர்களை மன்னிப்பதற்குரிய பலத்தினை நாம் கண்டடைய, நமக்கு உதவக்கூடிய கண்ணோட்டங்கள் எவை? 6 முதல் 7 கண்ணோட்டங்கள் இருக்கின்றன. அவை பின்வருமாறு:

- *முதலாவதாக*, நாம் நம்முடைய சொந்த அபூரணங்களை ஒப்புக்கொள்ள வேண்டும்; இன்னுமாக, குற்றம்செய்தவரை நம்மோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. அப்போஸ்தலனாகிய பவுல், தன்மீது எந்தக் குற்றச்சாட்டுகளையும் சுமத்தமுடியாது என்று தெரிவித்துள்ளார்; ஆனாலும் தான் பரிபூரணமானவர் இல்லை என்று உடனடியாக ஒப்புக் கொள்கின்றார். "***என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே.***" (1 கொரிந்தியர் 4:4 KJV) "***எனக்கு எதிராகக் குற்றம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் நான் குற்றமற்றவனாகி விடமாட்டேன். எனக்குத் தீர்ப்பு வழங்குபவர் ஆண்டவர் ஒருவரே.***" (1 கொரிந்தியர் 4:4 திருவிவிலியம்). "***எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி..***" என்றும் பவுல் அடிகளார் எழுதியுள்ளார். (உரோமர் 3:23)

- *இரண்டாவதாக*, தேவன் நமக்கு எவ்வளவு மன்னிப்பு அருளியுள்ளார் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். நாம் மன்னிக்கப்படும்படிக்கு வேண்டிக்கொள்வதற்கு முன்னதாக, அவர் நம்மை மன்னித்துவிட்டார். இயேசு வந்து, தண்டனையை அனுபவித்தார். "***நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.***" (உரோமர் 5:8)

- *மூன்றாவதாக*, நம்முடைய மனதில் நம்மால் முடிந்தமட்டும் நாம் பாவியிடமிருந்து பாவத்தைப் பிரித்துப்பார்க்க வேண்டும். குற்றவாளி ஒரு தனிமனிதனென இப்போது பெற்றிருக்கும் மற்ற சாதகமான/நல்ல/உண்மையான பண்புகளைக்குறித்து நாம் சிந்தித்துப்பார்ப்பதற்கு அல்லது அவன் அல்லது அவள் தேவனுடைய இராஜ்யத்தில் எப்படிப்பட்ட நபராக மாறுவார்கள்

என்பதையாகிலும் சிந்தித்துப்பார்ப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். ஒருவன் பற்றின இந்த ஒரு நல்ல அபிப்பிராயத்தை/ தோற்றத்தை, நம்மைக் காயப்படுத்தின அல்லது தாக்கின அவனது வார்த்தைகள் அல்லது செயல்களிடமிருந்து, நம்முடைய மனங்களில் நாம் பிரித்துவைத்திட வேண்டும். இது தொடர்புடைய விஷயத்தில் பிரசித்திப்பெற்ற வழக்கறிஞர் பிரையன் ஸ்டீபன்சன்/Bryan Stevenson அவர்கள்: "நாம் ஒவ்வொருவரும், நாம் செய்த மிக மோசமான செயல்களைக் காட்டிலும், ஏதோ விதங்களில் உண்மையில் சிறந்தவர்களாக இருக்கின்றோம்" என்று கூறியிருக்கின்றார்.

- *நான்காவதாக,* உனக்குக் குற்றம் புரிந்தவனுக்காகவும் இயேசு மரித்தார் என்பதை நினைவில்கொள்; அப்படியானால் கிறிஸ்து என்னை இரட்சிப்பதற்காக மரித்ததுபோல, எனக்குக் குற்றம் புரிந்தவனையும் காப்பாற்றுவதற்காக அவர் மரித்திருக்க, அவனை நான் பகைக்கலாமா அல்லது வெறுக்கலாமா? என்று உன்னை நீயே கேட்டுக்கொள்.

- *ஐந்தாவதாக,* தம்மைச் சிலுவையில் அறைந்துகொண்டிருப்பவர்களை மன்னித்தருள இயேசு தேவனிடம் ஜெபம் பண்ணினார் என்பதையும் நினைவில்கொள்ளுங்கள். ஸ்தேவானும்கூட தன்னைக் கல்லெறிகிறவர்களைத் தேவன் மன்னிக்கும்படியாக ஜெபித்துள்ளார். குற்றம் புரிந்தவர்களைத் தேவன் மன்னிப்பதற்காகவும், அவர்களுக்குத் தேவன் வழிகாட்டுவதற்காகவும் நாம் உண்மையாய் ஜெபம் பண்ணுவோமானால், குற்றம் புரிந்தவர்மேல் கோபத்தையும், வெறுப்பையும் நம் மனதிற்குள் நாம் வைத்திருக்கமுடியாது.

- *ஆறாவதாக,* தீமையின் அனுமதி என்பது, தேவனுடைய திட்டமாக இருக்கின்றது என்பதை நினைவில்கொள்ளுங்கள். இது மற்றவர்களின் தீய வார்த்தைகள் அல்லது செயல்கள் குறித்துப் புரிந்துகொள்ள உதவுகின்றது. தீமைக்கு அனுமதி அளிப்பது என்பது, மனுக்குலத்திற்குப் பாவத்தின் அகோர தன்மையைக்குறித்துக் கற்பித்துக் கொடுப்பதற்காகும்; இது தெய்வீகத் திட்டத்தினுடைய மிக முக்கியமான பாகமாகும்.

- *ஏழாவதாக,* குற்றவாளி உங்களுக்கு எதிராய்க் காரியங்களைச் செய்திருந்தபோதிலும், அவன் செய்தவைகள் உங்களுக்கு எதிரானவைகள் அல்ல என்பதை உணர்ந்துகொள்வீர்கள். நம்

மீதான குற்றவாளிகளின் உணர்வுகளும், கோபங்களும், உணர்ச்சிகளும், நாட்டங்களும் தீயவையாக இருப்பினும், குற்றவாளிகள் தங்களுக்கே விரோதமாக உண்மையில் செயல்பட்டிருக்கின்றனர். யுகத்தின் முடிவில் பொல்லாப்பின் பெருக்கத்தினால், அநேகருடைய அன்பு தணிந்துபோம் என்று இயேசு நம்மை எச்சரித்துள்ளார். "*அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்*" (மத்தேயு 24:12). நாம் உதாசீனப்படுத்தப்படும்போது அல்லது காயப்படுத்தப்படும் போது, நாம் இரக்கம் காண்பிக்கவும், மன்னிக்கவும் முற்படும் முடிவை தெரிந்தெடுத்துக் கொள்வோமாக. "யாராவது உங்களைக் காயப்படுத்தும் போது, அவர்களைப் பதிலுக்கு நீங்களும் காயப்படுத்த முயற்சிப்பதற்குப்பதிலாக, அவர்களின் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதே கருணை" என்று ஒருவர் கூறியுள்ளார்.

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, மன்னிக்கவே முடியாது என்று ஏதேனும் இருக்கின்றதா? இல்லை! என்றே நான் (ஆசிரியர்) எண்ணுகின்றேன். கிறிஸ்தவ ஜீவியத்தைக்குறித்து அநேக புத்தகங்களையும், மன்னிப்புகுறித்து இரண்டு புத்தகங்களையும் எழுதியுள்ள அமெரிக்க நாட்டு எழுத்தாளராகிய லூயிஸ் பி. ஸ்மெட்ஸ்/Louis B. Smedes அவர்கள்: "கொடுமையான தீமைகளைச் செய்யும் மனிதர்கள், மன்னிக்கப்பட முடியாத மிருகங்கள் ஆவார்கள் என்று நாம் சொல்லுவோமானால், நாம் ஒருபோதும் கொடுக்கக்கூடாத அதிகாரத்தைக் குற்றவாளிகளுக்குக் கொடுத்துவிடுபவர்களாக இருந்துவிடுவோம். அதென்னவெனில் பாதிக்கப்பட்டவர்களின் இருதயங்களில், குற்றவாளிகளின் தீமை பற்றின நினைவுகள் உயிரோடு இருப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுவிடுகின்றது. இன்னுமாக, பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வேதனையான கடந்த காலத்தின் நினைவுகளினால் என்றென்றுமாகத் துன்புறுத்தப்பட்டு ஜீவிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுவிடுகின்றது" என்று எழுதியுள்ளார்.

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, சில சமயம் குற்றவாளிகள் தங்கள் குற்ற உணர்வுகளிலிருந்தும், அவமானத்திலிருந்தும் வெளிவருவதற்கு மற்றும் சொஸ்தமாகுவதற்கு, நம்முடைய மன்னிப்பை அவர்களது செவிகள் கேட்பது

அவசியமாகக் காணப்பட்டாலும், மன்னிப்பு என்பது முதன்மையாக, நம்முடைய மனம் மற்றும் நம்முடைய ஆவிக்குரிய நல்வாழ்விற்கு நாம் செய்யும் ஒன்றாகும். மேலும், கடந்தகால அனுபவங்களின் காயங்களுடனும், வலிகளுடனும் நம்முடைய ஜீவியங்கள் இணைக்கப்படாமல் காணப்படும்படிக்கே நாம் மன்னிக்கின்றோம். நாம் ஏற்கெனவே வாசித்துள்ள நமது கர்த்தராகிய இயேசுவின் அறிவுரைகளையும், எபேசியர் 4:31-32-ஆம் வசனங்களில் இடம்பெறும் அறிவுரைகளையும் பின்பற்றுவோமாக; "**சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்**" (எபேசியர் 4:31-32). "**ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடியபொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்**" (கொலோசெயர் 3:12-14). மன்னிக்கின்றவர்களாகும்படிக்கு நம் அனைவருக்கும் தேவன் உதவுவாராக.

ஆமென்!!

சகோ. *Tom Gilbert*
FLORIDA CONVENTION, 2021
(Christian Resources App)

**முக்கிய குறிப்புகள் :**

## முக்கிய குறிப்புகள் :

# மறுரூபமாக்கும் சத்தியங்கள்

[தமிழாக்க வெளியீடுகள்]

1. கிறிஸ்தவ திருமணம்
2. முறுமுறுப்பு
3. பாதங்கழுவுதல்
4. பெருமை
5. மன அழுத்தம்
6. குற்றங்கண்டுபிடித்தல்
7. ஜெபம்
8. மன்னிக்க முடியும்

பிரதிகள் தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
8428737474; 9442221874